إن الدين عند الله الإسلام — لا إله إلا الله محمد رسول الله

# FRIDAY SERMON - வெள்ளிக்கிழமை சொற்பொழிவு

**Hazrat Khalifathullah Munir Ahmad Azim (A)**

**13 January 2017 [13 Rabi'ul Aakhir 1438 Hijra]**

## பிரார்த்தனையின் மேன்மைகள்



சலாமிற்குப்பின் ஹஸ்ரத் கலீ.ஃ.பதுல்லாஹ் தஷஹ்ஹுதும், தவத்தும், சூறா அல்.ஃ.பாத்திஹாவும் உருவிட்டப்பின் **பிரார்த்தனையின் மேன்மைகள்** என்ற விஷயத்தை அடிப்படையாகக் கொண்டு தனது வெள்ளிக்கிழமை சொற்பொழிவை துவங்கினார்.

**என் இறைவனே! என்னை சிறந்த முறையில் நுழையச் செய்வாயாக! மேலும் என்னை சிறந்த முறையில் வெளிப்படுத்துவாயாக! மேலும் உன்புறத்திலிருந்து எனக்கு உதவி செய்யும் ஒரு சக்தியை ஆக்குவாயாக! என்று கூறுவீராக. [17:81]**

இந்த பிரார்த்தனை தூய தூதர் முஹம்மது (ஸ) விற்கு மக்காவில் நின்று மதீனாவை நோக்கி பயணம் மேற்கொள்வதற்கு (ஹிஜ்ரா) முன்னதாக இறக்கப்பட்டதாகும். இப்பிரார்த்தனையில் ஓர் முன்னறிவிப்பு அடங்கியிருக்கின்றது. ஹிஜ்ரா போவது தொடர்பாகவும் அவற்றுடனே திரும்ப வருவது தொடர்பாகவும்! அது மட்டுமின்றி அதற்கும் மேலான பொருளின் பகுதிகள் இதில் உட்பட்டிருக்கின்றது. தூய தூதர் முஹம்மது (ஸ) மக்காவில் 13 வருடக்காலம் துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்பட்டிருந்தார். இக்காரணத்தினால் தான் அன்னார் சென்றது, அதுபோலவே உண்மையும் கொண்டே அன்னார் போனார். அதுப்போல் உண்மையும் கொண்டே

அன்னார் திரும்ப வந்தார்.

அன்னார் பயணம் மேற்கொள்வதற்கு முன்னதாகவே அவர் திரும்ப வருவதைக் குறித்து விளக்கப்பட்டிருப்பது ஏன் என்ற கேள்வியும் எழும்புகிறன்றது. தூய தூதர் முஹம்மது (ஸ) தனது பௌதீக வாழ்க்கையில் ஒரு நிமிடம் கூட துன்பப்பட இறைவன் விரும்பவில்லை. அன்னார் மக்காவில் நின்று நிரந்தரமாக போகவேண்டி வருகின்றது என்ற எண்ணம் உருவெடுப்பதற்கு முன்பாகவே திரும்ப வருவதைப்பற்றி வெளிப்படுத்தினார். அன்னார் திரும்ப வருவதைக் குறித்து முன்னதாகவே கூறினார். அது உறுதியாகும் என்று திடப்படுத்தினார். ஆகையால் கவலைப்படவேண்டிய விஷயம் ஒன்றுமில்லை என்ற சமாதானம் வழங்கப்பட்டிருக்கின்றது. தூய தூதுர் (ஸ) எந்த சூழ்நிலையில் மக்காவைவிட்டு சென்றார் என்ற உண்மையும் இப்பிரார்த்தனையின் மூலம் வெளிப்படுகின்றது. தன்னுடைய எதிராளிகள் அன்னாரை ஒரு கள்வன் என்று முத்திரை குத்தினர். மட்டுமின்றி பொய் இட்டுக்கட்டி கூறுபவன் என்றும், பொய்த்தூதரென்றும் பரப்பினர். மதீனாவில் அன்னாருக்க கிடைத்த வரவேற்பு, அன்னாரின் உண்மைக்கு சாட்சியாகின்றது. மதீனாவைப் பற்றி குறிப்பிடும் இவ்வசனம், அன்னாரின் உண்மைக்கு அவர்கள் மதீனா மக்கள் சாட்ச்சி பகர்ந்தனர். அதுப்போன்று திரும்ப வருவதன் மூலம் மக்காவின் ஜனங்களும் அன்னாரின் உண்மைக்கு சாட்ச்சியளிக்க வேண்டிவருகின்றது.

இது அன்னாரின் பிரார்த்தனையின் பலனாகும். அல்லாஹ்வின் முழுமையான உதவியாலும் ஆகும். இப்பிரார்த்தனையை எல்லா பயணங்களிலும் சமர்ப்பிக்கலாம். குர்-ஆனின் பிரார்த்தனைகளுக்கு மிகப்பெரிய பொருள் உண்டு. அதை பலவகைப்பட்ட விஷயங்களுக்காக தொடர்பு படுத்தலாம். குர்-ஆன் கூறும் பிரார்த்தனைகள் எதுவாகயிருந்தாலும், ஒரு குறிப்பிட்ட விஷயத்திற்கோ, அல்லது சூழ்நிலைக்கு என்றிருக்கட்டும், தினசரி வாழ்வில் அத்தகைய சூழலில் அத்தகைய பிரார்த்தனை உபயோகப்படுத்தலாம். தூய தூதருடையவும், அன்னாரின் தோழமைக் கூட்டத்தினுடையவும் செயல்பாடு இதுவாகும். இப்பிரார்த்தனையின் மற்றொரு பொருள் ஒரு மனிதனின் வாழ்க்கையில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் மாற்றித்தின் விளக்கமாகும் இது. இந்த மாற்றம் தீமையில் நின்று நன்மையின் பக்கமும் அல்லது எதிராகவும்

மாறலாம். 17:79, 80 வசனங்களின் வாயிலாக அல்லாஹ் வெளிப்படுத்துகின்றான். பிரார்த்தனையின் மூலம் பெறும் மார்க்க வழிகாட்டுதல் கொண்டு பொருள்படுவது தூய தூதர் முஹம்மது (ஸ) - விற்கு மஹத்தான ஆன்மீக மேன்மையில் உயரமுடியும் என்பதாகும்.

**(நபியே) சூரியன் உச்சியில் சாய்ந்ததிலிருந்து இரவின் இருள் சூழும்வரை (ளுஹ்ரு, அஸ்ரு, ம∴ரிப், இஷா) தொழுகையை நிலை நிறுத்துவீராக இன்னும் ∴பஜருடைய தொழுகையையும் (நிலை நிறுத்துவீராக); நிச்சயமாக ∴பஜ்ரு தொழுகை சான்று கூறுவதாகயிருக்கிறது. இன்னும் இரவில் (ஒரு சிறு) பகுதியில் உமக்கு உபரியான தஹஜ்ஜுத் தொழுகையைத் தொழுது வருவீராக (இதன் பாக்கியத்தினால்) உம்முடைய இறைவன், மகாமம் மஹ்முதா என்னும் (புகழ்பெற்ற) தலத்தில் உம்மை எழுப்பப் போதும். (17:79, 80)**

உன்னதமான ஆத்மீகத்தில் பறந்து உயருவதற்கு விரம்புகின்ற ஒவ்வொருவரும் அன்றாடம் பிரார்த்திக்க வேண்டும். அப்பிரார்த்தனையின் பொருள் சரியான முறையில் புரிந்துக் கொள்ள வேண்டும். இல்லையென்றால் அவன் வழிதவறக்கூடும். பௌறாவின் மகன் பல் ஆமினப்போல்! பௌறாவின் மகன் பல் ஆம் ஒரு நல்லவனாக இருந்தான். அவன் பௌதீக ஆசைகளால் ஈர்க்கப்பட்டு நன்மையில் நின்று விலகிப் போனான். அக்காரணத்தால் அவனுக்கு அவமானப் பழிசுமக்க நேர்ந்தது. நாம் நமது வெளிப்பாடுகள் வழங்கிய ஒருவனின் நிலையை அவர்களுக்கு விளக்கிக் கொடுங்கள். ஆனால் அவன் அவற்றில்நின்று வழிமாறிப்போனான். ஆகையால் பிசாசு அவனை பின்தொடர்ந்து பிடித்துக் கொண்டது. ஆதலால் அவன் வழிதவறியவர்களின் கூட்டத்தில் ஆகிப்போனான். நாம் விரும்பியிருந்தால் அதன்வாயிலாக உயர்த்தியிருப்போம். ஆனால் அவன் புவியின் பக்கம் சாய்ந்து சுய ஆசைகளை பின்பற்றவும் ஆரம்பித்தான்.

**அவனுக்கு உதாகரணம் நாயைப் போன்று, அதை நீர் விரட்டினாலும் நாக்கைத் தொங்கவிடுகிறது, அல்லது அதை நீர் விட்டுவிட்டாலும் நாக்கைத் தொங்கவிடுகிறது. இதுவே நம் வசனங்களைப் பொய்யெனக் கூறும் கூட்டத்தாருக்கு உதாரணமாகும். ஆகவே அவர்கள் சிந்தித்து நல்லுணர்வு பெறும்**

**பொருட்டு இத்தகைய வரலாறுகளைக் கூறுகீராக. (7:176, 177)**

சிலநேரம் ஒருவன் தன் சுயலாபத்திற்காக, ஒரு ஆத்மீய பதவி அடைய விரும்பலாம். அது உலகின் மத்தியில் ஓர் அங்கீகாரம் கிடைப்பதற்காக இருக்கலாம். அத்தகைய மனிதர்களுக்கு சிலநேரம் ஒரு ஆத்மீய அனுபவங்களும் ஏற்படலாம் இது இறைவனில் நின்றுள்ளதாகும் என்று அவர்கள் எண்ணக்கூடும்! ஆனால் அது பிசாசில் நின்றுள்ளதாகும்.

எனது எல்லா தோழர்களையும், உண்மையை தேடுபவர்களையும், முஸ்லீம்களையும், மானிட குலத்தையும், சீரான பாதையின் மூலம் முன்னேற்றம் அடைவதற்கு ஆரவாரப்படுத்துகின்றேன், உற்சாகமூட்டுகின்றேன். இறைவனில் நின்று நீங்கள் உதவி வேண்டுங்கள், முழுமைப்பெற்றதும், உயிருள்ளதுமான பிரார்த்தனைக்கு மிக ஆழமான பொருட்கள் உண்டு. வேறுப்பட்ட சூழ்நிலைகளிலும், நிலைகளிலும் நடத்துகின்ற பிரார்த்தனைகளுக்கு! இது பௌதீகமும் ஆத்மீகவுமான பயணத்திற்கு ஊன்றுகோலாகும்.

சோதனைக்கட்டங்களிலும், துரித வேளையிலும் நம்பிக்கை கைவிடக்கூடாது! **இறைதிருப்தி, பெறுவதற்காக, ஒருவன் பொறுமையோடு தன்னையே இறைவனிடம் அர்ப்பித்துக் கொண்டால், அவனுடைய இன்னல்கள்யாவும் இறைவன் நீக்கம் செய்வான்.**

இறை திருப்தியை தன்வசப்படுத்துவதற்கு அவன் நம்மை உட்படுத்தட்டும்! ஆனந்த வேளைகளிலும், இன்னல் கட்டங்களிலும்! உங்களுடைய தீர்மானத்தை அல்லாஹ்விற்கு விட்டுக் கொடுங்கள். நீங்கள் ஒருபோதும் நஷ்டமடைந்தவர்களின் கூட்டத்தில் அகப்பட மாட்டீர்கள். அல்லாஹ்வின் திருப்திக்காய் உலகிலுள்ள யாவும் நீங்கள் கைவிடும்பொழுது, அல்லாஹ் (த) மறைத்து வைத்திருக்கும் அளப்பரியா பிரதிப்பலன் அந்நிமிடம் முதல் புதமையான முறையில் மிக்க மகிழ்ச்சியோடு உங்கள் முன்பாக திறக்கப்படும்.

**இன்ஷா அல்லாஹ்! ஆமீன்.**



**Issued by:**

**R. Jamaluddin Raother**

Amir Jamaat Ul Sahih Al Islam

South Zone, Kerala A693/2010



**Translated by:**

**Mohamed Sudheer. I**

Ph: 9659884310

E-mail: abdulsuthi9@gmail.com